Previous Date of examination : 07.06.2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 63/2018**

2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 5 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சபரிமணி | வயது | 27/2022 |
| தகப்பனார் பெயர் | கணேசன் | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது ஓவரூரில் வசித்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகள் செந்தில்நாதன், சையது சுல்தான், முருகானந்தம் ஆகியோரை தெரியும். நீதிமன்றத்தில் முருகானந்தம் மட்டும் ஆஜராகியுள்ளார். செந்தில்நாதனும், சையது சுல்தானும் ஆஜராகவில்லை. ( நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி முருகானந்தத்தை சாட்சி அடையாளம் காட்டுகிறார்) ஓவரூர் கிராமத்திற்கு எதிரி முருகானந்தம் செந்தில்நாதனை அழைத்துக்கொண்டு வந்தார். மலேசியாவிற்கு வேலைக்கு போக முதல் ரூ.50 ஆயிரம் விசா அடிக்கவேண்டும் என்று கேட்டார்கள். அந்த தொகையை முருகானந்தம் வீட்டிற்கு போய் நான் ரூ.50 ஆயிரத்தை ரொக்கமாக கொடுத்தேன். 2015 ம் தேதி 10 வது மாதம் கொடுத்தேன். தேதி ஞாபகம் இல்லை. பின்னர் விசா வந்தவுடன் ரூ.45 ஆயிரத்தை என வீட்டிற்கு வந்து செந்தில்நாதனும், முருகானந்தமும் வாங்கி சென்றார்கள். மலேசியா டிக்கட் கொடுத்து சென்னைக்கு போக சொன்னார்கள். நான் சென்னைக்கு போய்கொண்டிருந்தபோது போன் செய்து டிக்கட் கேன்சல் ஆகிவிட்டது என திரும்பி வரசொல்லிவிட்டார்கள். சுமார் ஒரு மாதம் காத்திருக்குமாறு சொன்னார்கள். அதன் பிறகு செந்தில்நாதனின் போன் சுவிட்ச் ஆப் ஆகி விட்டது. அதன் பிறகு முருகானந்தம் வீட்டிற்கு போய் கேட்டபோது மதுரையில் நாசா டிராவல்ஸ்க்கு போன் செய்து கேட்க சொன்னார். அந்த டிராவல்ஸ் எதிரி சையது சுல்தானுடையதாகும். அந்த மெபைல் நம்பருக்கும் போன் செய்து பார்த்தபோது அதவும் ரீச் ஆகவில்லை. அதன் பிறகு எஸ்.பி. ஆபீஸிற்கு வந்து புகார் கொடுத்தோம். அதன் பிறகு கடிதத்தின் மூலம் சையது சுல்தான் எனது பாஸ்போர்ட்டை மட்டும் எனது வீட்டு முகவரிக்கு அனுப்பியிருந்தார். செந்தில்நாதன் எழுதியது போல் சையது சுல்தான் முகவரியிலிருந்து பாஸ்போர்ட்டும், கடிதமும் வந்தது. என்னிடம் காட்டப்படும் கடிதம் மற்றும் அதனுடன் வந்த அஞ்சல் உறை எனக்கு வந்ததுதான். ( **கடிதம் அ.சா.ஆ.12 ஆகவும், அஞ்சல் உறை அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) பணம் இதுவரை எனக்கு மேற்படி நபர்களிடமிருந்து வரவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.12 கடிதமானது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் சரிதான். புகார் கொடுத்து 2 மாதம் கழித்து கடிதம் வந்தது. மேற்படி கடிதத்திற்கும், கடிதத்தில் உள்ள சங்கதிகளுக்கும் எதிரி செந்தில் நாதனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மேற்படி கடிதமானது என்னாலும், புலன்விசாணை அதிகாரியாலும் கலந்து ஆலோசித்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.12 கடிதமானது செந்தில் நாதனுடையது ஆகும். அவர்தான் போட்டாரா என நான் நேர டியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு நான் வழக்கு சம்பவத்திற்கு பின்னர் வேறு இன்டர்வியூ மூலம் துபாய் நாட்டிற்கு போய் 4 ஆண்டுகள் இருந்தேன். என்னிடம் பணம் வாங்கியபோது 1 மாதத்திற்குள் அனுப்புவதாக சொல்லிதான் பணம் வாங்கினார்கள். அவ்வாறு காலக்கெடு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முருகானந்தம்தான் செந்தில்நாதனை எனக்கு அறிமுகம் செய்தார் என்றால் சரிதான். செந்தில் நாதன் நேரடியாக அணுகவில்லை என்றால் சரிதான். ஆனால் முருகானந்தமும், செந்தில்நாதனும் தான் எனது வீட்டிற்கு வந்தார்கள். 1வது எதிரி வீட்டில் வந்து பணம் வாங்கியதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் வீட்டில் கொடுத்ததால் ஆவணம் இல்லை. நான் பணம் கொடுத்ததை பார்த்த சாட்சிகள் உள்ளதா என்றால் எனது அப்பா, அம்மா உள்ளார்கள். எனது அப்பா, அம்மாவை போலிசார் விசாரித்தார்கள். போலிசார் கார்த்தி கொடுத்த புகார் சம்பந்தமாகத்தான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல செந்தில்நாதன் நேரடியாக அணுகி கேட்கவில்லை என்றும், பணம் எதுவும் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. கடந்த ஜனவரி மாதம் செந்தில் நாதன் பணத்தை கொடுத்துவிடுவதாக போன் செய்து சொன்னார். ஆனால் பணம் இதுவரை கொடுக்கவில்லை. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

முதல் விசாரணை சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான். சையது சுல்தானை நான் நேரில் பார்த்தது இல்லை என்றால் சம்பவத்திற்கு பின்னர் பார்த்தேன். அதற்கு முன்பு போனில்தான் பேசினேன். சையது சுல்தானிடம் நான் நேரடியாக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். செந்தில்நாதன் மூலம் கொடுத்தேன். செந்தில்நாதன் சையது சுல்தானிடம் பணம் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சையது சுல்தானே என்னிடம் நான் கொடுத்த பணம் அவரிடம் உள்ளதாக சொன்னார். நான் சொல்வது பொய் என்றும், சையது சுல்தானிடம் பணம் எதுவும் செந்தில்நாதன் கொடுக்கவில்லை என்றும், என்னிடம் சையது சுல்தான் பணம் உள்ளதாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சையது சுல்தானிடம் எனது பணம் உள்ளதாக அவர் சொன்ன விபரத்தை சொன்னேனா என்றால் வழக்கிற்கு பின்னிட்டுதான் சையது சுல்தான் பணம் அவரிடம் உள்ள விபரத்தை கூறினார். அதனால் அதனை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் சையது சுல்தான் என்னிடம் எனது பணம் அவர் வசம் இருப்பதாக

சொல்லவில்லை என்றும், வழக்கிற்கு வழு சேர்க்கவேண்டும் என்பதற்காக 2 வது எதிரியை வழக்கில் சேர்ந்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 2 வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் போலிசார் விசாரணையில் சொல்லிய விபரத்திற்கு முரண்பட்டு தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி முருகானந்தம் எனக்கு எந்த வகையில் பழக்கப்பட்டார் என போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. 2016-ல் விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எஸ்.பி. ஆபீஸில் வைத்து விசாரித்தார்கள். எஸ்.பி.ஆபீஸில் அன்றைய தினம் அ.சா.1 கார்த்தி, பாலசுப்பிரமணியன், கிருஷ்ணமூர்த்தி, சரவணன் உள்ளிட்ட 10 பேர் அங்கு இருந்தோம். கார்த்தி மற்றும் மற்ற நபர்களையும் சேர்த்துதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அன்றைக்கு என்னை சாட்சியாகதான் விசாரித்தார்கள். கார்த்தி புகார் கொடுத்தபோது நாங்களும் அங்கு இருந்தோம். எங்களையும் சாட்சிகளாக சேர்த்துக்கொள்ளவதாக சொன்னார்கள். புகார் கொடுத்த தேதியில் எதிரி முருகானந்தம் அங்கு இல்லை. அதன் பிறகு ஒரு நாள் விசாரணைக்கு எதிரி முருகானந்தம் வந்தார். அவரை போலிசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்தபடி நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகானந்தம் எனது வீட்டிற்கு வரவில்லை என்றும், பணம் எதுவும் பெறவில்லை என்றும், முருகானந்தத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முருகானந்தமும் என்னை போல் பாதிக்கப்பட்டவர் என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் பணம் வாங்குவதற்கு வந்தார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருவாரூர்.

Previous Date of examination : 07.06.2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 63/2018**

2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 6 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணியன் | வயது | 41/2022 |
| தகப்பனார் பெயர் | கோவிந்தராஜ் | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது ஓவரூரில் வசித்துக்கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி முருகானந்தத்தை தெரியும். எதிரிகள் செந்தில்நாதன், சையது சுல்தான் ஆகியோரையும் தெரியும். சாட்சிகள் கார்த்தி, ராமநாதன், உதயகுமார், பிரித்தீவ்ராஜ், சபரிமணி, அரவிந்தசாமி, சரவணகுமார், மற்றொரு பாலசுப்பிரமணியன் ஆகியோரை தெரியும். 20.10.2015 ம் தேதி வெளிநாடு அனுப்புவதாக சொல்லி எதிரி செந்தில்நாதன் என்னிடம் பணம் ரூ.50 ஆயிரத்தை வீட்டில் வந்து வாங்கினார். அதன் பிறகு விசா வந்தவுடன் மேலும் ரூ.40 ஆயிரம் வாங்கினார். திருச்சி ஏர்போர்ட்டுக்கு வரச்சொல்லிவிட்டு ரூ.10 ஆயிரம் வாங்கிக்கொண்டார்கள். திருச்சி ஏர்போர்ட்டுக்கு போய்கொண்டிருந்தபோது டிக்கட் கேன்சல் ஆகிவிட்டதாக சொல்லி வீட்டிற்கு போக சொன்னார். ஒரு மாதத்திற்குள் மீண்டும் அனுப்பி விடுவதாக சொன்னார். அதன் பிறகு போன் செய்தால் போன் சுவிட்ச் ஆப் என வந்தது. அதனால் எதிரி முருகானந்தத்திடம் போய் கேட்டபோது அவர் எனக்கும் செந்தில்நாதன் போன் செய்யவில்லை, சுவிட்ச் ஆப் என வருகிறது என சொன்னார். அதன் பிறகு எஸ்.பி. ஆபீஸ் போய் புகார் கொடுத்தோம். கார்த்தி புகார் கொடுத்தார். நாங்கள் 10 பேரும் வந்திருந்தோம். அதன் பிறகு செந்தில்நாதனை போலிசார் பிடித்து வந்தார்கள். செந்தில்நாதனிடம் கேட்டபோது சையது சுல்தான் என்ற பாய் ஏமாற்றி விட்டதாக சொன்னார். பணத்தை கொடுத்துவிடுவதாக சொன்னார். இதுவரை பணம் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் கவர் எனக்கு வந்ததுதான். அதில் பாஸ்போர்ட் வந்தது. அதனை செந்தில்நாதன் அனுப்பியிருந்தார். ( **அஞ்சல் உறை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கார்த்தி உள்ளிட்ட சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். கவரில் பாஸ்போர்ட் மட்டும் வந்தது. ( **சாட்சி மீண்டும் அரசு தரப்பு வழக்கறிஞர் காட்டிய கடிதத்தை பார்த்துவிட்டு செந்தில்நாதனிடமிருந்து பாஸ்போர்ட்டுடன் கடிதமும் வந்ததாக கூறுகிறார். கடிதம் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.14 அஞ்சல் உறையில் அனுப்புநர் முகவரி சேவகன் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.15 கடிதத்தில் சேவகனிடம் செந்தில்நாதனும் ஏமாந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை, கார்த்தியுடன் 10 பேரும் சேர்ந்து கையெழுத்து போட்டு புகார் கொடுத்தோம். புகார் கொடுத்து ஒரு மாதத்திற்கு பின்னர் அ.சா.ஆ.14 கவரில் பாஸ்போர்ட்டும் அ.சா.ஆ.15 கடிதமும் வந்தது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் எதிரி சேவகன் என குறிப்பிட்டு ஒரு முகவரி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.14, 15 ஆகியவை புலன்விசாரணை அதிகாரியால் என்னுடன் கலந்து ஆலோசித்து தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் எனவும், அதனால்தான் எதிரி சேவகன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சேவகன் என்ற நபரையும் இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்த விபரம் தெரியுமா என்றால் தெரிந்துக்கொண்டேன். எதிரி செந்தில்நாதனிடம் பணம் கொடுத்ததிற்கு எழுத்துமூலமான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.14 அஞ்சல் உறையில் பாஸ்போர்ட் வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பாஸ்போர்ட் கிடையாது என்றால் சரியல்ல. 1 வது எதிரி வெளிநாடு அனுப்புவதாக சொல்லி பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் புகார் கொடுக்கும்போது வடவன்பட்டி சேவகனையும் சேர்த்து புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வடவன்பட்டி சேவகன் எனக்கு கடிதம் எழுதியதாக போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் செந்தில்நாதன்தான் சேவகன் பெயரில் கடிதம் எழுதியுள்ளார் என்று சொன்னேன். போலிசார் சேவகனை விசாரித்த விபரத்தை நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை என தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.